மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :

(அ) அங்கீகாரம் பெறப்படாத 111 ஆக்கிரமிப்புளில் 37 ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டன.

(ஆ) எண்ணிக்கை 74 ஆகும்.

திரு. சீ.மு. வாசன் : மீதமுள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற இந்த அரசு ஆவன செய்யுமா என அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் தலைவர் அவர்களே, மீதமுள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றுவதற்கு அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

திரு. ரா. வெங்கிடுசாமி என்கிற வெங்கிடு : தலைவரவர்களே, நெடுஞ்சாலை ஆக்கிரமிப்பிலிருந்து அப்புறப்படுத்தப் பட்டவர்களில் பாதிக்கப்பட்ட குடிசைவாசிகளுக்கு மாற்று இடம் ஒதுக்கப்பட்டிருக்கிறதா? அப்படி ஒதுக்கப்பட்டிருந்தால், எவ்வளவு? ஒதுக்கப்படாமல் இருந்தால், ஒதுக்க ஏதாவது நடவடிக்கை அரசின் முன்னால் இருக்கிறதா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் தலைவர் அவர்களே, குடிசைவாழ் மக்கள் மிகுதியாக ஆக்கிரமிப்பு செய்ய வில்லை. பெட்டிக் கடை வைத்திருப்பவர்களும், மற்ற வியபாரம் நடத்துபவர்களும் வீடுகளைக் கட்டிக் கொண்டிருப்பவர்களும்தான் அதிக ஆக்கிரமிப்பு செய்து இருக்கிறார்கள். குடிசை வாழ் மக்கள் சில பகுதிகளில் ஆக்கிரமிப்பு செய்ததற்கு மாற்றி இடம் தருவதற்கு மாவட்ட ஆட்சித் தலைவரால் வேறு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

சிங்காநல்லூரில் மேம்பாலம்.

*564 வின—திரு. ரா. வெங்கிடுசாமி என்கிற வெங்கிடு : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிங்காநல்லூர் நகரத்தில், ஒண்டிப்புதூரில், திருச்சி செல்லும் நெடுஞ்சாலையின் குறுக்கே ரயில்வே மேம்பாலம் கட்ட அரசு திட்டமிட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது வேலை மேற்கொள்ளப் படும்?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :

(அ) மற்றும் (ஆ) : இல்லை.

1978 மார்ச் 14]

(முற்பகல் 9–40)

திரு. ரா. வெங்கிடுசாமி என்கிற வெங்கிடு : தலைவரவர்களே, சிங்காநல்லூர் நகரப் பகுதியில் திருச்சி நெடுஞ்சாலையில் பாலம் கட்டவேண்டியது மிகவும் முக்கியமானதும், அவசியமானதும் ஆகும். தொழிலாளர்கள் கணிசமான நிறைந்து இருக்கும் அந்தப் பகுதியில் போக்குவரத்து ஏராளமாக இருக்கிறது, பாலம் இல்லாத காரணத்தால் அடிக்கடி ஆக்சிடெண்ட் ஏற்பட்டு உயிர் இழப்பு ஏற்படுகிறது. இதைக் கணக்கில் எடுத்துக்கொண்டு அந்த இடத்தில் பாலம் கட்ட அரசு துரித நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் தலைவரவர்களே, மேம்பாலம் அப்பகுதியில் அமைக்கவேண்டிய தேவையை ஆராய்ந்து அது பற்றி பரிசீலனையை அரசு மேற்கொள்ளும்.

கைத்தறித்துணிகள் விற்பனை.

*565 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு கைத்தறி-பஞ்சாலைகள் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) கைத்தறித் துணிகளின் உபயோகத்தை அதிகப்படுத்த சமூக சேவா ஸ்தாபனங்களின் உதவியை அரசு நாடியுள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் யாது?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : (அ) மற்றும் (ஆ) சமூக சேவை நிறுவனங்கள் தங்களது தேவைகளுக்கு கைத்தறித் துணிகளைப் பயன்படுத்துவதை ஊக்குவிக்க அரசு திட்டமிட்டுள்ளது.

திரு. மி. வின்சென்ட் : பேரவைத் தலைவரவர்களே, சமீபத்தில் ஏற்பட்ட புயல்வெள்ளச் சேதத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு கைத்தறி ஆடைகளை அரசு வாங்கி வழங்கியது போல், பிற சமூக நிறுவனங்களும் வாங்கி வழங்கினவா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவரவர்களே, ஆம்.

திரு. செ. சிவசாமி : தலைவரவர்களே, கைத்தறித் துணி இன்று அதிகமான அளவிற்குத் தேங்கியிருக்கிறது. அந்தத் தேக்கத்தைத் தவிர்க்க, சோசலிச நாடுகளுக்கு கைத்தறித் துணி ஏற்றுமதி செய்ய அரசு ஏற்பாடு செய்ய முற்படுமா?